01.12.2020
இதழ்-04

அதிர்ஷ்டத்தை அறிவதற்கு

# அட்சய லக்ன பத்ததி

ஆசிரியர் : சி.பொதுவுடைமூர்த்தி



## அட்சய லக்னமும் இயங்கும் 45 நாட்களும்

C.K.சத்தியநாரயணன் சென்னை

## 100% சதவீதம் வெற்றி அடைய ஜோதிடர் சிறப்பு வாய்மொழி

சி.பொதுவுடைமூர்த்தி பட்டுக்கோட்டை.



www.alpastrology.com | ALPAIR FOUNDATION
smoorthyjothidar@gmail.com | Sasti Tv | ALP Astrology
+91 9786556156

#சேலத்தில் #அட்சய லக்ன பத்ததி ஜோதிட சிறப்பு பயிற்சி வகுப்பு

#ALP பயிற்சி வகுப்பு

1). அட்சய லக்ன பத்ததி கணக்கீட்டு முறைகள்

2) மூன்று கர்ம பாவகங்கள் (அம்மா, அப்பா , நான்)

3) பிறப்புக்கு முன், பிறப்புக்கு பின்

4) பிறப்புக்கு பின் உள்ள கோச்சார கிரகங்களின் வேலை

5) 10 வருடத்தை இயக்கூடிய அட்சய லக்னத்தின் தன்மை, அதன் அதிபதியின் நிலை எப்படி என்பதை ஆய்வு செய்தல்

6) அட்சய லக்ன நட்சத்திர புள்ளி அதிபதியின் தன்மையை ஆய்வு செய்தல்

7) அட்சய லக்னம், அட்சய லக்ன அதிபதி, அட்சய லக்ன நட்சத்திர புள்ளி அதிபதிக்கும்

உள்ள தொடர்புகள் எப்படி இருக்கும் என்பதை ஆய்வு செய்தல்

8) அட்சய லக்ன அதிபதியின் ஆதிபத்திய தன்மையும் அட்சய லக்ன நட்சத்திர அதிபதியின் ஆதிபத்திய தன்மையையும் ஆய்வு செய்தல்

9)அட்சய லக்ன அதிபதியின் நிலை அட்சய ராசியின் அதிபதியின் நிலை எப்படி என்பதை ஆய்வு செய்தல்

10) அட்சய லக்கின அதிபதிக்கும் அட்சய ராசி அதிபதிக்கும் உள்ள தொடர்புகள் என்ன என்பதை பார்க்க வேண்டும்

11)உதாரணமாக அட்சய லக்னம் பரணி நட்சத்திரம் 3ஆம் பாதம் எனில் சுக்கிரனின் தன்மைகளை ஆய்வு செய்ய வேண்டும் சுக்கிரன் 2ம் பாவகத்தை இயக்குகிறதா 7 ஆம் பாவகத்தை இயங்குகிறதா, பணவருவாய் சம்பந்தப்பட்ட கேள்வியா வீடு மனை சார்ந்த

கேள்விகளா திருமணம் சார்ந்த கேள்விகளா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்

12) 12 கட்டங்களுக்கும் உதாரண ஜாதகம்

13) ராகு, கேதுகளின் தன்மைகள் ஆதிபத்தியங்களை அறியும் முறை

14) தசாநாதன் அட்சய ராசியின் தன்மைகள்

15) அட்சய லக்னம், கோச்சாரம் இனைத்து பலன் பார்ப்பது எப்படி?

16) என்ன படிக்கலாம், கல்வி நிலை எப்படி?

17)பணவரவு எப்போதெல்லாம் கிடைக்கும்

18) திருமணம் எப்போது நடக்கும்

19) வீடு, மனை, வாகன யோகம் எப்போது?

20) குழந்தை பாக்கியம் அறிவது எப்படி

21) தொழில், வேலை எப்போது அமையும், எப்படி இருக்கும் ?

22) கடன் எப்போது அடையும் ?

23) நோய் ஏற்படும் , தீரும் காலம் எப்போது?

24) வெளிநாடு போகும் வாய்ப்பு எப்போது?

25) கேள்வி|பதில்.

**அட்சய லக்ன பத்ததி ஜோதிட பயிற்சி நடைபெறும் இடம்:**

**5/107-27 GOPALAPURAM, OFF SALEM STEEL PLANTROAD,**

**JAGIR AMMAPALAYAM Salem Salem TN 636302.**



## ALP- அட்சய லக்ன பத்ததியில் எப்படி 45 நாள் அதிபதி இயங்குகிறது .

எல்லா முறையிலும் ஜாதகருடைய குண நலன் பழக்கவழக்கங்கள் ஜாதகருடைய மற்ற உறவுகள் . ஜாதகருக்கும் அந்த உறவுகளுக்கும் உள்ள நிலை மகிழ்ச்சி, பிரிவு சொல்லலாம் ஆனால் எப்போது இது நடக்கும் . எந்த கால கட்டத்தில் இந்த பலன் நடக்கும் என்பதை அறிய ஜோதிடர்கள் சிரமப்படுகிறார்கள் . Alp என்னும் அட்சய லக்ன பத்ததி முறை யில் இதற்கு மிகவும் எளிய முறையில் பலன் காண முடியும் என்பதை இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன் .

ALP புள்ளியில் மனிதனின் வாழ்க்கை.

சென்ற மாதம் ஒருவர் என்னிடம் ஜாதகம் பார்ப்பதற்காக வந்தார் அவருடைய ALP லக்ன புள்ளி தனுசு லக்னம் மூல நட்சத்திரத்தில் சென்றுகொண்டு இருக்கிறது தனுசு லக்னாதிபதி குரு தன் வீட்டிற்க்கு 7இல் மிதுன

ராசியில்., மூல நட்சத்திர அதிபதி கேது 10 இல் கன்னி  இராசியில் உள்ளார் . சுக்ரன் 4 ஆம் பாவத்தில் மீனத்தில் சந்திரன் மேஷ ராசியில் பரணி நட்சத்திரம். ஜாதகம் பார்க்கும் சமயத்தில் ALP புள்ளி மூல நட்சத்திரமும் 45 நாள் இயக்ககூடிய கிரஹம் சந்திரன் . ALP: கேது/சந்திரன்

என்று பார்த்த மாத்திரத்திலேயே மகனின் படிப்பு மூலமாக மன  வேதனை  என்று என்னால் சொல்ல முடிந்தது .காரணம் ALP  மூல நட்சத்திரமும் 45 நாள்  உட்பிரிவு அதிபதி சந்திரன் 5இல் அதாவது தனுசு alp லக்னம் 8ஆம் அதிபதி 5இல்

8ஆம் வீட்டுச் சந்திரன் மகன் மூலமாக சிரமம் கொடுக்கிறார்.  இதில் மூல நட்சத்திரம் 4 ஆம் பாதத்தில் இதன் பாதிப்பு அதிகமாக இருக்கும் அதாவது மூல நட்சத்திரம் 4 ஆம் பாதத்தில் / சந்திரனின் 45 நாள் இயக்கம் பாதிப்பு அதிகமாக இருக்கும்.

2 மாதம் முன்பு வீட்டு கடன் சம்பந்தமாக பேங்க் சென்று வந்தீர்களா என கேட்டேன் ஆமோதித்தார் .இரண்டு மாதம் முன்பு அவருக்கு (ALP: கேதுவில்/ சுக்ரன் ) 45 நாள் அதிபதி சுக்ரன் இவர் தனுர் லக்னத்திற்கு 6/11 ஆம் அதிபதி லக்னத்திற்கு 4 இல் உள்ளார் .

அடிப்படையில் நாம் புரிந்து கொள்ளவேண்டியது தனுர் லக்னத்திற்கு சந்திரன் 8ஆம் அதிபதி , சுக்ரன் 6/11 ஆம் அதிபதி . சந்திரன் மேஷத்தில் இருப்பது என்பது 5ஆம் பாவகரீதியாக ஜாதகருக்கு பிரச்சனையும் , சுக்ரன் தனுர் லக்னத்திற்கு 4ல் மீனத்தில் இருப்பது கடன் சம்பந்தம் 4 ஆம் பாவகம் வீடு என்பதை இணைத்து பலன் பார்க்க தெரிந்தால் போதும் . மேலும் 11 ஆம் பாவகத்திற்கு 6 இல் சுக்ரன் . ALP யின் உச்சகட்டம் என்னவென்றால் எளிமை மற்றும் துல்லியம். நீங்கள் இந்த 45 நாள் அதிபதியின்

அருமையை Alp பிரசன்னதிலும் தெளிவாக பலன் சொன்னால் சரியாக வரும் . Alp software இல் இந்த பலனை தெளிவாக சொல்ல 108 ற்குள் ஒரு எண்ணை ஜாதகம் பார்க்க வருபவர்களிடம் கேட்டு பிரசன்னதில் டைப் செய்து 45 நாள் அதிபதி எங்கு இருக்கிறார் மேலும் alp 405 நாள் அதிபதிற்கும் 45 நாள் அதிபதிற்க்கும் உள்ள தொடர்பு, 45 நாள் அதிபதி alp க்கு என்ன ஆதிபத்தியம் பெறுகிறார் என்று பார்த்தால் பலனை மிகவும் துல்லியமாக சொல்ல முடியும் என்பதை பதிவு செய்கிறேன்.

இந்த கட்டுரையை எழுதி க்கொண்டிருக்கும் சமயம் ஒரு போன் கால் வந்தது .

ஒரு problem என்று சொன்னார்கள் ஒரு பிரசன்னம் போட்டேன் பிரசன்னதில் 74 என்ற எண்ணை சொன்னார்கள் இது alp மகம் 3 யை காண்பித்தது சிம்ம சூரியன் 4இல் alp : சனி/

கேது அதாவது 405 நாள் அதிபதி சனி , 45 நாள் அதிபதி கேது , கேது alp க்கு 4 இல் சனி alp க்கு 6 இல் அவர்களுடைய தாய் மருத்துவமனையில் மூச்சு பிர்ச்சனை இருதயம் சம்பந்தமான வலி மேலும் கொரோனா . தெய்வத்திடம் முறையிட சொன்னேன் . எவ்வளவு துல்லியம் பாருங்கள்.

ஒரு நட்சத்திர பாதத்தையும் ALP விதிப்படி ஒரு வருடம் ஒரு மாதம் 10 நாள் அதாவது 405 நாட்கள் அதை ஒன்பது கிரகத்திற்கு பிரித்தால் 45 நாள் வரும் .லக்னம் 45 நாளை எப்படி இயக்கு கிறது என்பதை காண்போம் . முதலில் மூல நட்சத்திரம் முதல்பாதம் எண்ணும் பொது முதல் 45 கேதுவின் உட்பிரிவு இயங்குகிறது நட்சத்திர வரிசைப்படி அடுத்த 45 நாள் சுக்ரன் அடுத்து 45 சூரியன் ., சந்திரன் ., செவ்வாய்., ராகு ., குரு., சனி., புதன் என்ற வரிசை படி 405 நாட்கள் நடத்தி முடிக்கும்.

அதாவது கேது1ஒன்றாம் பாதம்/கேது., கேது1ஒன்றாம் பாதம் / சுக்கிரன்., கேது1ஒன்றாம் பாதம்/சூரியன்., கேது1ஒன்றாம் பாதம்/சந்திரன்., கேது1ஒன்றாம் பாதம்/செவ்வாய்., கேது1ஒன்றாம் பாதம்/ராகு., கேது1ஒன்றாம் பாதம்/குரு., கேது1ஒன்றாம் பாதம் /சனி., கேது1ஒன்றாம் பாதம்/புதன் என்ற 45 நாள் இயக்கம் இருக்கும் . மூல நட்சத்திரம் 4 ஆம் பாதம் சரியாக 8ஆம் பாவத்தை இயக்குவதால் அந்த பாதத்தின் சந்திரனின் உட்பிரிவு 45 நாள் பாதிப்பு அதிகமாக இருக்கும்.

இந்த முறையை உலகிற்கு அறிமுகப்படுத்திய ஐயா பொதுவுடை மூர்த்தி அவர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

**C K சத்யநாராயணன் 9940042415**

**ALP Astrologer Chennai .91**



உ
ALP ASTROLOGY
அட்சய லக்ன பத்ததி
அட்சய லக்னம்,
அட்சய ராசி சிறப்பு ஜோதிட வகுப்பு
2 நாட்கள் மட்டும்
05.12.2020 முதல் 06.12.2020
இடம்:
5/107-27 GOPALAPURAM,
OFF SALEM STEEL PLANT ROAD, JAGIR AMMAPALAYAM SALEM-636302.
முன்பதிவு அவசியம்
9786556156 - 9788518230
ALPAIR
FOUNDATION
www.alpastrology.com
smoorthyjothidar@gmail.com

https://youtu.be/gscr4aU0IZg

# அட்சய லக்கின பத்ததியில் குழந்தையின்மையும் ஆழ் மன ரகசியமும்

அனைவருக்கும் வணக்கம்,
இந்த நாள் இனிய நாள்,
வாழ்வில் எல்லாரும் எல்லா வளங்களும்
பெற வேண்டும்.
ஆழ்மன ரகசியமும்,நம்முடைய
வாழ்க்கையில் அட்சய லக்ன பத்ததியில்
குழந்தையின்மைக்கான காரணம்
என்ன?என்ற ஆய்வுமுறை.

உலக நாடுகளிலேயே புண்ணிய பூமி
என்பது தமிழ்நாடு மட்டும்தான்.
எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும்
தமிழ்நாடு தான் சொர்க்கபூமி, ஏன்னா?
இங்குதான் எல்லா

ஆலயங்களும்,கோவில்களும் நம்முடைய வாழ்க்கையில் சிற்றிலக்கியம், பேரிலக்கியமாக இருக்கட்டும், எத்தனை விஷயங்களாக இருந்தாலும் புண்ணிய பூமி யோகமான பூமி, தமிழ்நாடு தான்.
எப்படி சின்ன சின்ன விஷயங்கள் நடக்கவில்லை என்றால்

ஒரு ஜாதகத்தில் ஐந்தாம் பாவகம் குழந்தை இல்லை என்பதை முடிவு செய்யும் என்று சொல்வோம்.
தனுசு லக்னத்தில் ஒரு ஜாதகர் வருகிறார்,தனுசு லக்னத்திற்கும் அட்சய லக்னம் மீனம்,வயது 32,
மீன லக்னத்தின் 5ம் அதிபதி சந்திரன்.
தனுசு லக்னத்தில் ஐந்தாம் அதிபதி செவ்வாய்,
சந்திரன் செவ்வாய் சம்பந்தப்பட்டு குழந்தை பிறக்குமா? பிறக்காது.

செவ்வாய் உடைய வீட்டில் சந்திரன் நீச்சம்.

என்ன பிரச்சனை? என்று பார்த்தால் கடந்த காலத்திற்கு சென்றுதான் தெரிந்துகொள்ள முடியும்.
Past life therapy, hypnotherapy,
Past life regression மூலமாக கடந்த காலத்திற்கு அழைத்து செல்ல வேண்டும்.
கடந்த காலத்தில் அவருடைய மனைவியை வயிற்றில் எட்டி உதைத்து இருக்கிறார்.
இந்த ஜென்மத்தில் குழந்தை இல்லை என்று சொல்கிறார்.

யார் யாருக்கெல்லாம் குழந்தை இல்லை என்றால்?
போன ஜென்மத்தில் குழந்தையை விட்டு சென்றவர்கள்,
போன ஜென்மத்தில் குழந்தை பிறந்து அந்த குழந்தையை ஏங்க வைத்தவர்கள்,

இந்த சூழ்நிலையை
ஏற்படுத்தியவர்களுக்கு குழந்தை
பாக்கியம் இருக்காது.
இது எல்லாமே சூட்சமமாக போன
ஜென்மத்தில் ஒவ்வொருவருடைய
வாழ்க்கையிலும் பார்த்த விஷயங்கள்.

குழந்தைகளுக்கு உணவு கொடுக்காமல்
ஏமாற்றுவது,
குழந்தை பிரிவது,
இந்த மாதிரி நிறைய விஷயங்களால்
குழந்தை பாக்கியம் இல்லை.

தன்னுடைய மகளுக்கு ,மகனுக்கு
கொடுக்க வேண்டிய பாக்கியத்தை
சரியாக கொடுக்கவில்லை.
ஒரு குழந்தைக்கு கூடவும், ஒரு குழந்தைக்கு
குறைத்தும் செய்தவர்களுக்கு இந்த
ஜென்மத்தில் குழந்தை கிடையாது.

போன ஜென்மத்தில் என்ன தவறு
செய்தாயோ அதை தான் இந்த
ஜென்மத்தில் அனுபவிக்கிறாய்.

இந்த விஷயத்தை உளவியல் ரீதியாகவும்
சரி, அட்சய லக்ன பத்ததி மூலமாகவும் சரி
கடந்த காலத்தைப் பார்க்கக் கூடிய வழி
ஜோதிடம், ஜாதகம்.
ஜோதிடத்தை தவிர வேறு ஒன்றும் இல்லை.
ஆழ்மனதின் மூலமாக என்னால் முடிந்த
விஷயங்களை உங்களிடம் பதிவு
செய்கிறேன்.மீண்டும் இனியதொரு
நிகழ்வில் சந்திப்போம்.
நன்றி, வணக்கம்.

**அனைவருக்கும் வணக்கம் ,**

இன்றைய நாள் இனிய நாள் வாழ்வில் எல்லாரும் எல்லா வளங்களையும் பெற வேண்டும்.

அட்சய லக்ன பத்ததி எளிமையான முறையில் எப்படி ஜாதகத்தை ஆய்வு செய்வது.

இன்றைக்கு வந்த கேள்வி வேலை சம்பந்தப்பட்ட விஷயம்.

1, 10 சம்பந்தப்பட்டது.இது இரண்டும் பலமாக இருந்தால் இரண்டாம் பாவகம் பலமாக இருக்கும். 1, 10 பலமாக இருந்து, இரண்டாம் பாவகம் பலம் இழந்தால் வேலை இருக்கும், ஆனால் வருமானம் கிடைக்காது. 1, 2, 10பலமாக இருந்தால்ஜாதகர் வேலை பார்பார், நல்ல வருமானம் கிடைக்கும், அந்த பொருளையும் அனுபவிக்க முடியும்.இதுதான் விதி.

நம்முடைய நிகழ்வுகளை நேரலையில் நிறைய பேர் பார்க்கிறார்கள்.நீங்கள் பதிவுகளை ஷேர் பண்ணும்போது இந்த பதிவுகள் யாருக்காவது பயன்படும் என்பதுதான் நோக்கம்.

ஏன்னா? வளரும் இளம் ஜோதிடர்களுக்கு இதை ஒரு விஷயமாக கற்றுக் கொடுக்க வேண்டும் .

இந்த திரையில் பார்க்கக்கூடிய ஜாதகர் என்னென்ன விஷயங்களை அனுபவிக்கிறார் என்பது பார்க்கிறோம்.

லக்னம் மிதுன லக்னம், மிதுன லக்னத்திற்கு 10ம் அதிபதி குரு.10ஆம் வீடு பலப்பட்டால் 4ஆம் வீடு minus ஆகும்.4ஆம் வீடு பலப்பட்டால் 10ம் வீடு minus ஆகும்.

லக்னாதிபதி மிதுனம்.மிதுன லக்னத்தில் ராசியாக வரக்கூடியது காற்று ராசி. 10-ம்வீட்டு

அதிபதி மீனம். அப்பொழுது காற்றும், நீரும் சேரக்கூடிய ராசி.

காற்றும் நீரும் சம்பந்தப்பட்டால் போராட்டமான விஷயங்கள், படித்த படிப்பிற்கு ஏற்ற வேலை இல்லை.10 வருடத்தை இயக்கக்கூடிய அதிபதி புதன் ,புதன் இந்த லக்னத்திற்கு அட்டமத்தில்.ஜாதகரே அட்டமத்தில் இருப்பதால் எதிர்பார்த்த யோகத்தை கொடுக்குமா? கொடுக்காது.ஆனால் பத்தாம் வீடு பதினோராம் இடத்தில் யோகத்தை செய்து கொடுக்கும்.

மிதுன லக்னத்திற்கு பாக்கியாதிபதி அட்டமாதிபதி சனிபகவான். 9, 10சேர்ந்து 4 ஆம் வீட்டில் இருந்தால் 4ஆம் வீடு புகழ் கொடுக்கும். ஆனால் 10ம் வீடு minus ஆகும்.இந்த ஜாதகருக்கு

லக்னாதிபதி அட்டமத்தில் இருப்பது பிரச்சனை, 2 - ல் ராகு இருப்பதால்தேவையில்லாத பேச்சு ,தேவையில்லாத பிரச்சனைகள் உருவாகும்.

ஆனால் உடனே வேலை உண்டு,படித்த படிப்பிற்க்கு வேலை இல்லை .அப்படியே வேலை செய்தாலும் பிரச்சனை ஏற்படும்.

ராகு நின்ற நட்சத்திரம் ஆயில்யம்,ராகுவை இயக்கக்கூடிய நட்சத்திரம் புதன், அவரும் அட்டமத்தில்,ஏதோ ஒரு அளவு வருமானம் வரும். பெரிய அளவில் எதிர்பார்க்க முடியாது.

2021 ஜூலை வரைக்கும் ஜாதகருக்கு வேலை பிரச்சனைகள் உண்டு. 2021 ஜூலைக்கு பிறகுஜாதகருக்கு பெரிய யோகம் உண்டு மாற்றம் உண்டு.

ஜூலை வரை எனக்கு கிடைத்த வேலையை எப்படி சரி செய்ய போகிறோம் என்பது இந்த ஜாதகம் சொல்லக்கூடிய விஷயம்.

ஜாதகருக்கு குருதிசை,அட்சய ராசி பூரட்டாதி மூன்றாம் பாதம்.பூரட்டாதி 3ஆம் பாதம்முடிந்தாலே  ஜாதகருக்கு மாற்றத்தை கொடுக்கும். 2021 ஜூலை வரை கஷ்டம்தான். இதற்கு பிறகு வெளியூர் ,வெளிமாநிலம் சம்பந்தப்பட்ட இடங்களில் பெரிய வேலை உண்டு. வடகிழக்கு, தென்மேற்கில் ஒரு வாய்ப்பு உண்டு. மீண்டும்ஒரு இனியதொரு நிகழ்வில் சந்திப்போம்.

நன்றி, வணக்கம்.



ALP
ASTROLOGY


ALP ASTROLOGY CLASS - BANGALORE
ALP
ASTROLOGY
GOLDEN TEAM

https://www.youtube.com/watch?v=R3XuezxbWGY&t=9s

**அனைவருக்கும் வணக்கம்,**

இன்றைய நாள் இனிய நாள் ,வாழ்வில்

எல்லாரும் எல்லா

எல்லா வளங்களையும் பெற வேண்டும்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழவேண்டும்.

அட்சய லக்ன பத்ததியில் ஆய்வுகள் மிக துள்ளியமாக எடுக்கிறார்கள்.ஆய்வுகள் ஏன் வந்துச்சு ?என்ன காரணம் ?

திருமணம் ஏன் காலதாமதம்?.

திருமணம் பற்றி ஏன் நிறைய விஷயங்கள் பேசுகிறோம்னா, நிறைய கேள்விகள் அதிகமாக வருது, வீடு,வண்டி, வாகனங்கள், சுற்றி நடக்க கூடிய விஷயங்கள் ஒரு குடும்பம் கேள்வியாக வருது.

மிகப்பெரிய அளவில் வாழ்கையில் நல்லது, எது? கெட்டது எது? என்றால் திருமணம்.

திருமண வாழ்க்கை ஒரு மனிதனுக்கு நன்றாக அமைந்து விட்டால் அவன் வாழ்கையில் வெற்றிபெற்றான் என்று அர்த்தம்.

அவனுடைய பூர்வபுண்ணியம், பாக்கியம், கர்மா எல்லாம் அவனுடைய பாக்கியங்கள் எல்லாம் இதற்குள் அடங்கியுள்ளது.அம்மா ,அப்பா ,கணவன், மனைவி உறவுகள்.கணவன் மனைவி வாழ்க்கையில் சமமாக புரிதலோடு வாழ்ந்தாலே வாழ்க்கை சிறப்பாக அமையும்.மனைவியை எந்த அளவுக்கு நேசிக்கிறோமோ அதுதான் நண்பர்களுடைய அமைப்பு.

நண்பர்கள் எல்லாம் பலமா இருந்தா இந்த வாழ்க்கையில் மிக யோகமான ஒரு நிலையை அடையக் கூடியது7-ம் பாவகம்.

ஏழாம் பாகத்தில் ஒருவருடைய ஜாதகம்,ஜாதகருக்கு 32 வயது, ஆறு மாதம்,பிறப்பு லக்கனம் மீனம் ,ALP லக்கனம் கன்னி ,நட்சத்திர புள்ளி சித்திரை 2 ல் இருக்கு.நவாம்ச புள்ளி கன்னி ராசி.ஏழுக்கு உடையவன் அட்டமத்தில் குரு.

இந்த ஜாதகருக்கு திருமணமானால் பிரச்சனை,இரண்டுக்கும் ,ஒன்பதுக்கும் 7ல் சுக்கிரன் உச்சம் ஆனாலும், லக்னாதிபதி ஐந்தில் புதன் சென்றாலும், எனக்கு என் மனதுக்கு ஒப்பான ஆசையைத் தூண்டக்கூடிய என்னுடைய எதிர்பாராத சந்தோஷத்தில் வாழ்க்கை வாழக்கூடியதாக நினைத்துக்கொண்டு என்னுடைய புத்தி, என்னுடைய மனம் எங்க இருக்குன்னா 5 ல்.என் மனதிற்கு சந்தோஷமாக இருக்கிற மாதிரி நான் நடிக்கிறேன் .

ஏழாம் வீடு சுக்ரன் என்பதால் கற்பனை உலகத்தில் ஜாதகர் வாழ்வார்.

2020 அக்டோபர் வரை பிரச்சனை இருக்கும்.சித்திரை 2 முடிந்து, சித்திரை 3 வரும்பொழுது துலாம் லக்னம் செயல்படும்.இரண்டு மாதத்திற்குள் பேசி முடிவு பண்ணிட்டு அதன் பிறகு திருமணத்தை வைக்கலாம்.காலதாமதம் இருக்கக்கூடாது.மேலோட்டமாகவே இந்த ஜாதகத்தில் எவ்வளவு பிரச்சனைகள் இருக்கும் என்பதை காணமுடிகிறது.

அடுத்தது கலந்துரையாடலை முகநூலில் செய்வோம். www.alpastrology.com ல் ஜோதிட நண்பர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கணும்,நிறைய கருத்துக்கள் நிறைய பதிவுகள் வரவேண்டும் என்பது ஆசை ஏன்னா?அவர்கள் அவர்களுடைய கருத்துகளைபதிவு செய்ய வேண்டும்.அதாவது நான் என்ன பண்ணியிருக்க? என் கைக்குள் ஒரு பொருள் இருக்கா ?இல்லையா? என்பதை

காமிக்கணும். மீண்டும் ஒரு இனிய தொரு நிகழ்வில் சந்திப்போம். நன்றி ,வணக்கம்





https://youtu.be/yNkhi3POEoQ




அனைவருக்கும் வணக்கம்,

இன்றைய நாள் இனிய நாள் வாழ்வில்

எல்லாரும் எல்லா வளங்களும் பெற வேண்டும்.

ஈர்ப்பு விதி எப்படி இயங்குகிறது?ஏன்னா?

நிறைய பேர் இந்த கேள்வியை கேட்கின்றனர்

.நீங்கள் பலமாக குருவை வழிபட

வேண்டும்,குருவின் தன்மைகள் அதீத

நம்பிக்கையாக இருக்கும்.மொத்த உருவமும் கோள்கள் வழியாக நம்மளை இயக்குகிறது.அதாவது சாமி கும்பிடலனாலும் ஒரு விதி, சாமி கும்பிட்டாலும் ஒரு விதி.

1) ஈர்ப்பு விதி யை எப்படி இயக்குவது?

கவனம் , உச்சம், ஈர்ப்புவிதி இவற்றிற்கு என்ன சம்பந்தம்னா

கவனம் என்பது வார்த்தையின் உச்சரிப்பு. இப்பொழுது ஒரு கார் வாங்க வேண்டும் என்றால், அந்த கார் உடைய விலை, அதனுடைய கலர், எந்த கம்பெனிகார் என்பதை நாம்கனவு கற்பனையாக நாம் ஏற்படுத்த வேண்டும்.

பிரபஞ்சத்திற்கு நாம் உச்சரிக்கக் கூடிய வார்த்தைகள் சரியாக இருக்க வேண்டும்.ஈர்ப்பு விதி நம் ஜாதகத்தில் அனைவருக்கும் விளங்கும் .இந்த நேரலை யை பார்க்கக் கூடியவர்கள் புரிந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு என்ன வேண்டுமோ அதை எழுதி வையுங்கள். யார் யாருக்கோ நான் வழிகாட்டுகிறேன். ஆனால் நமக்கு அந்த வழியை முதலில் பயன்படுத்த வேண்டும். வீடுவாங்க இன்றைக்கு ஈர்ப்பு விதியை பயன்படுத்துவோம்.ஒரு கடிதம் பிரபஞ்சத்திற்கும் கடவுளுக்கும் இல்ல நம் முன்னோர்களுக்கும் எழுதுகிறோம். நான் சிவனுக்கு எழுதுகிறேன்,

சி. பொதுவுடை மூர்த்தி ஆகிய நான் சென்னையில் ஒரு வீடு வாங்க விரும்புகிறேன். 1800 ஸ்கொயர் பிட் அளவுக்கு வாங்கவேண்டும். மறைமலைநகர் பக்கத்தில் வாங்கனும். தெற்கு வடக்குவாசலாக இருந்தால் நல்லா இருக்கும்.ஏரி, குளம் பக்கத்தில் இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். அப்படி ஒருவரைபடம் வரைந்து வைத்துவிட்டு உங்க வேலையை பாருங்க. இது அப்படியே நடக்கும், இது அப்படியே நடக்குது.

ஈர்ப்பு விதி எப்படி செயல்படுகிறது பார்போம்.என்னுடைய நண்பர் ஒருவர் மோட்டார் வண்டி வாங்கனும் ,ஒரு எண் சொல்லுங்கனு கேட்டார். நா 1, 3, 5, 9 எண் நல்லா இருக்கும் என்றேன். வாங்க போனார், அந்த எண்ணில் வண்டி இல்லை. இரண்டாவது எண் 1, 5, 6, 9-ல் இதில் மோட்டார் வண்டி வாங்கினார். இரண்டு வண்டி வருது.1,3, 5, 9 எங்க வீட்டுக்கு வருது. இந்த வண்டி எங்க வீட்டுக்கு வருது. நான் சொன்னவண்டி என் கண்ணுமுன்னாடி இருக்கு. இந்த மாதிரி விஷயங்கள் ஆச்சரியமாக உள்ளது.

கட்டமைப்பு ஜாதகத்தில் விதி இருந்தால்தான் வரும். அதாவது பணம் எப்படி கிடைக்கும், பணம் யார் கொடுப்பா, அப்படிங்கிற விஷயம் எல்லாம் வேண்டாம். உங்களுக்கு ஒரு வீடு வேணும். இப்படி வீடு கட்டணும் என்று நினைக்கவே ஒரு விதி வேண்டும். வாழ்கையில் ஜெயிக்கனும் அப்படினா

உங்களுடைய கேள்விகளை தெளிவாக கேளுங்கள். பிரபஞ்சத்திடம், பிரபஞ்ச தாயிடம், நம்மை படைத்தவனிடம் கேளுங்கள். மனிதனாக பிறப்பதே பெரிய படைப்பு,

இதை பார்க்ககூடிய நண்பர்கள் ஈர்ப்பு விதியை பயன்படுத்துங்கள். வீடு வாங்கனும் ஆனா காசு இல்ல அப்படி சொல்லமா வீடு வாங்கணும் அப்படினு கேட்டு முடிச்சிடுங்க. அடுத்த விஷயம் பணம் பற்றி யோசிக்க வேண்டாம்.

கேள்வியும் நானே, பதிலும் நானே என்று பூட்டை போட்டு சாவியை எடுத்து திரும்பவும் பூட்டு போடுகிறீர்கள். ஈர்ப்பு விதி உங்களுடைய ஜாதகத்தில் இயங்காமல் இருப்பதற்கு காரணம் விதி. வீடியோ பார்க்கும் அனைவரும் ஈர்ப்பு விதியை சரியாக பயன்படுத்துங்கள். எழுதுங்கள், நிறைய விஷயங்களை, எழுத தெரியவில்லைனா பக்கத்தில் உள்ளவர்களை விட்டு எழுதுங்கள்.

ஈர்ப்பு விதியை சரியாக பயன்படுத்துங்கள். உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் கிடைக்கும் .

மீண்டும் ஒரு இனியதொரு  நிகழ்வில் சந்திப்போம்.

நன்றி, வணக்கம்



# ஜோதிட உலகில் அட்சய லக்ன பத்ததியின் வரலாற்று சாதனை

அனைவருக்கும் வணக்கம்,

இந்த நாள் இனிய நாள்,

வாழ்வில் எல்லாரும் எல்லா வளங்களும் பெற வேண்டும்.

நம்முடைய அட்சய லக்ன பத்ததி ஆய்வுகள் எப்படி என்றால்?

எல்லாம் பின்னோக்கிய ஆய்வுகள்.

உதாரணத்திற்கு ஒரு தசா புத்தியில் ஒருவருக்கு கல்யாணம் நடக்கிறது.1980க்கு போனால் அது முன்ஜென்மம்.

அதாவது நான் எங்கு பிறந்தேன், எப்படி இருந்தேன் என்பது பற்றி தெரிந்து கொள்வதுதான் முன்ஜென்மம்.

அதாவது நான் ஒரு கோயிலுக்கு சென்றால் ஒரு இடத்திற்கு சென்றால் எப்படியாவது பிரச்சனை வரும்.

ஒரே மாதிரியான விஷயங்கள் நடந்தால் அது எனக்கும் ,

என் முன் ஜென்மத்திற்கும் உள்ள தொடர்பு ஆகும்.

ஏதோ ஒருவகையில் நான் அந்த கோயிலுக்கு கடமைப்பட்டிருக்கிறேன், கடன் பட்டிருக்கேன் என்று அர்த்தம்.

நீங்கள்ஒரு நண்பரை சந்திக்கிறீர்கள் அவரால் உங்களுக்கு ஏதோ சந்தோஷம் ஏற்படுகிறது என்றால் அவர் எனக்கு கடனோ, பேரும், புகழும் கொடுக்கவில்லை.

அதாவது ஒரு ஆத்ம திருப்தி, இவரைப் பார்த்தால் ஒரு மாற்றம் உண்டாகும்.

அவருடன் பேசும் பொழுது நமக்கு சந்தோஷமாக இருப்பது போல் உணர்ந்தால் நம்மளுடைய முன்வினை கர்மாக்கள் அவரையும், நமது ஆத்மாவையும், நமது வாழ்வில் வெற்றியை அடைய உதவி செய்வதை காணமுடிகிறது.

நாம் பார்க்கக்கூடிய ஒவ்வொரு நிகழ்வுகளும் கடந்த காலத்தை, கடந்த இடத்தை, முன் ஜென்மத்தை, பற்றி கூறுவது தான் நம் ஜாதகம்.

1980இல் பிறந்த ஜாதகர், 1978 ல் எங்கிருந்தார், 1979 ல்

எங்க இருந்தார்.

அதாவது எதிர்காலத்தை கணிக்க கூடிய கருவி, எதிர்காலத்தை கணிக்கக் கூடிய பொருள், ஜாதகம் தான்.

வேறு எந்த பொருளும் கிடையாது.

எல்லாருடைய கேள்வி என்னவென்றால் முன் ஜென்மம் நமக்கு இருக்கா?என்பதுதான்.

ஏதாவது ஒரு விஷயத்தை தேடி கொண்டிருக்கும் பொழுது இந்த தேடலுக்கு நாம் ஒரு விடை கொடுக்க வேண்டும் என்ற நோக்கில்

அதாவது சூட்சமம்,

இந்த பூதவுடல் எங்கிருந்தது, இந்த கருவியை இயக்க கூடிய ஆத்மாக்கள் எங்கிருந்தது, அந்த உடல் எப்படி இயங்குகிறது

அதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம்.

இதை ஒரு ஜாதகம் முறைப்படி விளக்கினால் உங்களுக்கு புரியும்.

கடந்த கால விஷயங்களை ஆராய்ந்து பார்த்தால் உங்களுக்கு புரியும்.1930இல் பிறந்த ஒருவர் ஐம்பது வருடத்திற்கு பிறகு 1980இல் பிறந்திருக்கிறார்.

அவருடைய கடந்த கால நிகழ்வுகளை ஜாதகத்தில் ஆய்வு செய்ய முடியும்.கடந்த காலத்தின் பலன்களை சொல்ல கூடியது தான் இந்த அட்சய லக்ன பத்ததிஜோதிட முறை

நிறைய விஷயங்கள், நிறைய நிகழ்வுகள், அதாவது பயம், பதற்றம் தேவை இல்லாமல் பிரச்சனைகள்

வருவது, சம்பந்தப்படாமல் நமக்கு பிரச்சனைகள் வருவது,அதற்கு காரணம் தான் முன்ஜென்ம நிகழ்வுகள், அதாவதுதொடர்புகள்.வாழ்க்கையில்

நடந்த நிறைய நிகழ்வுகளை கணக்கிட்டுப் பார்த்து அறிந்து கொள்ள ஒரு அதி அற்புதமான

அட்சய லக்ன பத்ததி அட்வான்ஸ் மென்பொருளை உருவாக்கி அதில் நமது முன்ஜென்ம ஜாதகம் கணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு அதில் ஜாதகர்க்கு தற்போது நடக்கும் நன்மை தீமைகளுக்கு உரிய காரணங்களை ஆராய்ந்து பரிகாரம் செய்தால் பலன் தருமா என்பதையும், எப்போது பரிகாரம் செய்தால் உறுதியான வெற்றிகளை அடையலாம் என்பதையும் சாமான்யர்களும் அறிந்து கொள்ளும் வகையில்

உலக ஜோதிட வரலாற்றில் முதல்முறையாக முன்ஜென்ம ஜாதகத்தை அறியும் ஒரு அற்புதமான மென்பொருளை உருவாக்கி நமது பயன்பாட்டிற்கும், ஜோதிட உலகிற்கும் தந்து பெருமை சேர்த்த திரு.பொதுவுடைமூர்த்தி சார் அவர்களுக்கு ஜோதிட உலகின் சார்பாக நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்

**என்றென்றும் நன்றியுடன் R.சாந்திதேவி ராஜேஷ்குமார்**

**தஞ்சாவூர்&மன்னார்குடி**

**9786644994**

https://youtu.be/F9gnJ8v-7aE

# அட்சய லக்ன பத்ததி ஜாதக ஆய்வு



அனைவருக்கும் வணக்கம்,

இன்றைய நாள் இனிய நாள் வாழ்வில்

எல்லாரும் எல்லா வளங்களும் பெற வேண்டும்.

ஒவ்வொரு நாளும் நம்முடைய நேரலையில் நிறைய கேள்விகள், நிறைய விஷயங்கள் ஜாதகம் சம்மந்தமாக கேட்கப்படுகிறது.பொதுவான கேள்வி பதில்களுக்கு நாம் விளக்கம் அளிக்கிறோம்.அடிக்கடி தூக்கம் வந்து சரியாக தூங்க முடியவில்லை. மிகப்பெரிய ஆர்வலர்ஒரு தூய்மையானஉள்ளத்தை கொண்டவர். ஆனால் அவர் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதை என்னால் உணரமுடிந்தது.அன்றாட வேலைகளில் நீங்கள் செய்யும்  நிகழ்வுகளை கேட்டேன். 4, 5 எழுதிக்கொடுத்தார்.நீங்கள் உறங்க செல்லும் பொழுது என்ன விஷயங்கள் பார்ப்பீங்க, பண்ணுவீங்கன்னு கேட்டென்.

அவர் கூறிய 4, 5 விஷயங்களில் ஒன்றே ஒன்று மட்டும் என்னால் உணர முடிந்தது. என்னனா ? அலாரம் அப்படிங்கிற ஒரு விஷயம்.அலாரம் எந்த அளவுக்கு நல்லது ,அதேபோல் அலாரம்

நமக்கு எந்த அளவு தூண்டுகோலாக உள்ளதோ அது நமக்கு பிரச்சினையாகவும் அமையும்.அதேபோல் காலையில் நாலு மணிக்கு எழுந்து யோகா செய்து அவருடைய அன்றாட நிகழ்வுகளைபார்த்துக் கொண்டே இருந்திருக்கிறார். இது அவருக்கு இரவில் அலாரம் சத்தம் கேட்பது போல் தோன்றியிருக்கிறது,அலாரம் சத்தம் ஏற்படுவது போல் ஒரு பிரம்மை ஆக அவர் மனதுக்கு தோன்றி 'அவரை தூக்கமில்லாமல் செய்திருக்கிறது.

என்னிடம் வந்த பொழுது 15 நாளைக்கு நான் சொல்வதைக் கேளுங்கள். அலாரம் வைக்காதிங்க.நல்லா தூங்குங்க, நீங்க ஐந்து மணிக்கு எழுந்து  உங்கள் அன்றாட நிகழ்வுகளை செய்யலாம்.இரவு உறங்க கூடிய தூக்கம் சராசரியாக அவருடைய வாழ்க்கையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.இரவு சரியாக தூங்கவில்லை

என்றால் உடல் வலுவிழந்து பகலில் தலைவலி உண்டாகும்.அவருடைய உடல் மாற்றம் அடைந்திருக்கிறது.

நம்மளுடைய ஒவ்வொரு செயல்களிலும்தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க மாற்றங்கள் நமக்கு உண்டாகும்.அதனால் நாம் நிறைய நிறைய விஷயங்களை இழக்கக்கூடும்.

ஒரு சின்ன விஷயம் தான் அலாரம். அலாரம் வைத்தால் அன்று இரவு முழுவதும் விழித்து, விழித்து பார்ப்போம். இரண்டு மூன்று தடவை ஆவது.

நிறைய விஷயங்களை நேரலையில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். மீண்டும் ஒரு இனியதொரு நிகழ்வில் சந்திப்போம்.

நன்றி ,வணக்கம்.



உ
ALP
ASTROLOGY
அட்சய லக்ன பத்ததி
அட்சய லக்னம்,
அட்சய ராசி சிறப்பு ஜோதிட வகுப்பு
2 நாட்கள் மட்டும்
05.12.2020 முதல் 06.12.2020
இடம்:
5/107-27 GOPALAPURAM,
OFF SALEM STEEL PLANT ROAD, JAGIR AMMAPALAYAM SALEM-636302.
முன்பதிவு அவசியம்
9786556156 - 9788518230
ALPAIR
FOUNDATION
www.alpastrology.com
smoorthyjothidar@gmail.com

## ALP BOOK AVAILABLE PLACES

- **Vijaya publications coimbatore - 0422 2385614**
- **pulam publications chennai – 9840603499**
- **Centaram Books - Nagercoil - 8870364620**
- **Jayam Book Centre - Madurai - 9894658036**
- **Jayasree Book Centre - Kumbakonam – 9952882002**
- **Odyssey - Adyar - 044-24402264 / 65**
- **Odyssey - Thiruvanmiyur - 044-42037799**
- **Odyssey - Coimbature - 0422-2255199, 2255299**
- **Mary Martin Book Centre - Coimbature – 7598907381**
- **Vijaya Pathippagam - Coimbature – 7373787063**
- **Amutham Bookshop - Mettupalayam – 9486411900**
- **Paalam Bookshop - Salem – 9894784387**
- **Vallalar Bookshop - Salem – 9080498756**
- **Vallalar Bookshop - Erode – 7010047966**
- **New Booklands - T.Nagar - 044-28156006**
- **Wecan Books - T.Nagar – 8778696612**
- **Panuval Bookshop - Thiruvanmiyur – 9789009666**
- **Discovery Book Palace - K.K.Nagar – 8754506060**
- **Noolangadi – 9262037307**
- **Giri Trading Bookshops (BOOK SHOP ALL)**

**Available in websites:**

**marinabooks.com | udumalai.com |**
**discoverybookpalace.com**
**panuval.com | Commonfolks.in | wecanshopping.com**

# அட்சய லக்ன பத்ததி ஜோதிட மென்பொருளின் சிறப்புகள்:




இந்திய ஜோதிட வரலாற்றில் மட்டுமல்ல, உலக ஜோதிட வரலாற்றிலேயே முதல் முறையாக இரண்டு தேதிகளை உள்ளீடு செய்து சரிபார்த்து பலன் காணும் ஒரு அற்புதமான ஜோதிட மென்பொருளைஉருவாக்கி அறிமுகப்படுத்திய பெருமை அட்சயலக்ன பத்ததி ஜோதிட முறையை உருவாக்கிய திரு.சி. பொதுவுடைமூர்த்தி சார் அவர்களையே சாரும் உலகில் வேறு எந்த ஜோதிட மென்பொருளிலும் இந்த அமைப்பு இல்லை. அட்சய லக்ன பத்ததியின் ஜோதிட முறையில் நாம் நடந்த

விஷயங்களை எந்தளவுக்கு சரிபார்கிறோமோ அந்தளவுக்கு இனி நடக்க போகும் விஷயங்கள நாம் துல்லியமாக தேதி மாதங்களுடன் கூற முடியும்.

கடந்தகாலத்தை போய் பார்க்கக்கூடிய ஒரு அற்புதமான மென்பொருளை உருவாக்கி உள்ளார்.

பிறந்த தேதியை போட்டு நேரத்தை பதிவு செய்தால் நமது பிறப்பு ஜாதகம் வந்து விடும். அதன் கீழே உள்ள மற்றொரு Transit/Eventல் கடந்தகாலத்தில் நடந்த நிகழ்வுகளின் தேதியை பதிவு செய்தால், உதாரணமாக 2020-ல் நான் இருக்கிறேன். சில வருடங்கள் பின்னால் போய், 2012ல் போய் பார்பதற்கும், 2032 ல் போய் பார்பதற்கும் இந்த முறை எளிமையாக பயன்படும்.

இந்த கிரகங்கள் சம்பந்தப்படும்போது, இந்த நிகழ்வுகள் நடக்கும் என்பதை ஆய்வு செய்ய எளிமையாக இருக்கும்.

## மென்பொருள் உபயோகிக்கும் முறைகள்:

அட்சய லக்ன பத்ததியின் மொபைல் சாப்ட்வேர் எப்படி உபயோகிக்கலாம் என்பதை பார்ப்போம்.முதல்ல ALP சாப்ட்வேர் ல முதல் பக்கத்தில் என்னென்ன இருக்கு

- ஜாதகம்
- பஞ்சாங்கம்
- உருவாக்கியவர் திரு. பொதுவுடை மூர்த்தி ஐயாவின் குறிப்புகள் இருக்கு

*பிரசன்னம் அப்படிங்கற ஒரு விஷயம் இருக்கு இதில் 120 க்குள், ஒரு நம்பரை போட்டால் அந்த நம்பருக்கு உண்டான அட்சய லக்கனம் வந்துவிடும் அந்த அட்சய லக்கினத்தை வைத்து பலன் கூறினால் அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம்

*திருமண பொருத்தம் பார்க்க ஆண், பெண் இருவரின் பிறந்த விபரங்களை பதிவு செய்தால் எத்தனை சதவீத % பொருத்தம் இருக்கும், என்பதும் ALP பொருத்தம் உண்டா என்பதை அறியலாம்*Preferences ல் நம்முடைய மொழிகளை தேர்வு செய்து கொள்ளலாம்.தொழில்முறை ஜோதிடர்களாக இருக்கும்பொழுது ஜோதிடர்கள் பெயர் அப்படின்னு இருக்கும் இடத்தில நம்முடைய பெயரை பதிவுசெய்யவும்.

அடுத்து அயனாம்சம் லகரி &.சித்ர பக்ஷசம். தேர்ந்து எடுத்துக்கொள்ளவும் அடுத்தது மொழி. 5 மொழிகள் இருக்கு ஆங்கிலம், மலையாளம், கன்னடம், இந்தி, தமிழ் எந்த மொழியை பயன்படுத்துறோமோ அதை தேர்ந்தெடுத்து கொள்ளலாம்.அடுத்தது இடம். இதை எல்லாம் கொடுத்து சரி கொடுதோம்னா எந்த மொழியில் பார்க்க போகிறோம் என்பது தேர்வாகிடும். ஜாதகம் இருக்கு இந்த

ஜாதகத்தில் யாரைப்பற்றி பார்கிறோமோ அவருடைய பெயரை கொடுக்கலாம்.

உதாரணத்திற்கு ஒரு பெயர் குடுத்துட்டு, பிறந்த தேதி, பிறந்த நேரம் கொடுத்துட்டு, பக்கத்தில் உள்ள குறியீட்ல 24 மணிஇருக்கு, இதை அழுத்தினால், முற்பகல் (AM) பிற்பகல் (PM)என்பதை கொடுக்கவும், பிறந்த ஊர் எது என்பதை கொடுக்கவும்,அந்த ஊர் இல்லனா நமக்கு அந்த ஊர் Longitude, Lattitude கொடுத்து எந்த ஊர், எந்த மாவட்டம், எந்த நாடு, என்பதை கொடுக்க வேண்டும்.அதோட நேர வித்தியாச காலம் கொடுத்து தேர்வு கொடுக்க வேண்டும். கீழே ஆணா, பெண்ணான்னு பதிவு செய்யவும்.

தேர்வு கொடுத்தோம்னா ஜாதகம் திறக்கப்படும். முதல்ல பிறப்பு குறிப்புகள்,காலம் அதிகாலை3 மணி 34நிமிடம் PM-னுகொடுத்திருந்தா அதில் 15.34 வந்திருக்கும்.அட்சய லக்கனத்தில் கடந்த கால

நிகழ்வுகள் என்னஅப்படிங்கறது போட்டு நாம சரி பார்க்கலாம்.

நிறைய பேருக்கு திருமண நாள் எப்படி பார்ப்பது என்று தெரியவில்லை .அதை பார்ப்போம். இந்த ஜாதகத்துக்கு திருமண நாள் கொடுத்து transit event ஐ தொட்டால் நமக்கு ஒரு பக்கம் வரும்.முதல்ல வருஷத்தை கொடுக்கணும், மாதம் கொடுக்கணும், அடுத்து நாள் கொடுத்து தேர்வு செய்தால் ஒரு பக்கம் உருவாகும். Transit event ல நமது கடந்தகாலத்தில் நடந்த நிகழ்வுகளின் தேதிகளை பதிவு செய்தால் அன்றைய நாளில் அட்சய லக்னம் என்ன அதன் நட்சத்திர புள்ளி என்ன என்பதையும் அன்றைய நாளின் அட்சய ராசியின் தசாபுத்திகளும்,

கோட்சார, கிரகநிலைகளையும் தெரிந்துகொள்ளலாம் அதை வைத்து அந்த நிகழ்வுகளுக்கான காரணம் சரியானதா என்பதை ஆய்வு செய்துவிட்டால் இனி நடக்கப்

போகும் நிகழ்வுகளையும் நாம் துல்லியமாக இந்த நாளில் நடக்கும், நடக்காது என்பதை அறுதியிட்டு கூறிவிடலாம். உதாரணமாக: ALP லக்கனம் ரேவதி நட்சத்திரம் 2ம் பாதம்.ரேவதி நட்சத்திரம் இரண்டாவது பாதம் நவாம்சத்தில் எங்கு வந்திருக்கும் என்பதை கவனிக்க வேண்டும் .புதனுடைய நட்சத்திரம் தனுசில் இருந்து ஆரம்பிக்கும் அதனால் ரேவதி 1ம் பாதம். மகரத்தில் 2ம் பாதம் ஆனால் தெரியாதவங்க இந்த செயலியில் கீழ வந்தால் ஜாதகருடைய நவாம்சம் கீழே வரும்.இந்த நவாம்சத்தில் அட்சய லக்கன புள்ளி மகரத்தில் காண்பிக்கும் .மகரம் ஜென்ம லக்னத்தை தொட்டுச் செல்வதால் இந்த நேரத்தில் திருமணம் நடந்திருக்கும்.

இந்த இடத்தில் நாம் கொடுத்திருக்கும் பிறந்த தேதியின் அருகில் உள்ள மணி, நிமிஷத்தில் 3.25க்கு ரேவதி 1-ம் பாதம். வருகிறது அதை 3 நிமிடம் கூட்டி அதாவது

3.28க்கு ரேவதி 2ம் பாதம் திருமண நேரம் .இவ்வாறு ஒரு சில நிகழ்வுகளை பதிவு செய்து பிறந்த நேரத்தை சரி செய்ய வேண்டும் பின்பு now-னுகொடுத்தா இப்ப உள்ள அட்சய லக்னபுள்ளி நாள்கள் வரும்.

- **அடுத்து**

ராசி கட்டம் நமது பிறப்பு ஜாதக கட்டத்தில் நிறம் மாறியிருக்கும் கட்டங்கள் திதி சூன்யம் பெறும் ராசிகள் என்றும் , + குறியீடு யோகி, #குறியிடு அவயோகி, ( ) க்குள் இருக்கும் கிரகங்கள் வக்ரம் , *அஸ்தங்கம்,= சமபலம், என்பதை எளிதாக அறியலாம் கட்டத்திற்கு கீழ் ALP எந்த புள்ளியில் செல்லுது. என்பதை 405 நாள், 45 நாள், 5 நாள்,13 மணிநேரம் 1 மணி 29 நிமிடம் 10 நிமிடம் வரை ALP -ல கொடுத்திருக்கு.

- அடுத்து ஓரை
- அடுத்து தசா,புத்தி அந்தர, சூட்சும கிரகங்கள் இருக்கும்

- நட்சத்திரத்திற்குரிய பாதசாரங்கள்,
- அடுத்து நவாம்ச மண்டலம் இருக்கு. குண்டலினிக்கு

➢ **அடுத்து**

- பஞ்சாங்கம் இருக்கு

அதில் பிறந்த நாளின் விபரங்கள் அதாவது பிறந்த கிழமை, திதி,நட்சத்திரம், நாமயோகம், கரணம், நாம எழுத்துக்கள் வரும்.ராகுகாலம் ,எமகண்டம் ,குளிகை இது எல்லாமே வரும்.கீழே உதயாதி நாழிகை , அயனாம்சம் ,சூரிய உதயம் , சூரிய அஸ்தமனம்,

அடுத்து

- AB -அட்சய பாவகம். அட்சய பாவகத்தை எப்படி பயன்படுத்துவது என்பதை அடுத்த அட்சய லக்ன பத்ததி பாகம் 4 ல் அறியலாம்.

➢ **அடுத்து**

## திசை

- அதில் ஒவ்வொரு உட்பிரிவாக தசா, புத்தி,அந்தரம், சூட்சுமம், அதி சூட்சுமம் என 5 பிரிவுகளாக பிரித்து எந்த தேதியில் தொடங்கி, எந்த தேதியில் எத்தனை மணிக்கு முடியும் என்பது வரை அறியலாம்

அடுத்து கோச்சாரம் பிறந்த ஜாதகத்தில் உள்ள அமைப்புகள் கட்டத்தில் கருப்பு நிறத்தில் இருக்கு.அதில் குறிக்கப்பட்டுள்ள சிவப்பு குறியீடுகள் கோச்சார கிரக நிலைகளை குறிக்கும் ஒவ்வொரு கிரகங்களுக்கும் ஒரு குறியீடு உண்டு. ☉ சூரியன், ☿ புதன் , ☋ குறியீடு கேது , ♃ குறியீடு குரு , ♄ சனிஸ்வரன் குறியீடு ♂ குறியீடு செவ்வாய் ☽ அன்றைய கோச்சார சந்திரன் ♀ சுக்ரன், ☊ராகு, கீழே எந்தந்த கிரகங்கள் எந்த நட்சத்திரத்துல இருக்கு. நேட்டல், கோட்சாரம் என இரண்டு பிரிவாக இருக்கும். எதிர்காலத்தில் வரக்கூடிய பலன்களையும் பார்க்கலாம். 10 வருடத்திற்கு

முன்னாடி எப்படி இருந்தோம்- கிறதையும் நாம் பார்க்கலாம். காலத்தை போட்டு சரியான நிகழ்வில் பொருந்துதா? அப்படிகிறதையும் பார்க்கலாம்.. பஞ்சாங்கம் இன்றைய தேதியில் எப்படி இருக்கும் நாளைக்கு எப்படி இருக்கும்னு பார்க்காலாம். அதில் அன்றைய நாளின் விபரங்கள் அதாவது கிழமை, திதி, நட்சத்திரம், நாமயோகம், கரணம், நாம எழுத்துக்கள் வரும். ராகு காலம் ,எமகண்டம் ,குளிகை இது எல்லாமே வரும்.கீழே உதயாதி நாழிகை , அயனாம்சம் ,சூரிய உதயம் , சூரிய அஸ்தமனம், ஓரை உள்பிரிவு, பஞ்சபட்சிகாலம் போன்ற விபரங்கள் இருக்கும். அடுத்து *youtube Videos இருக்கு, *Trainning Videos

இருக்கு, அதில் 101 நிகழ்வில்வில் அட்சய லக்ன பத்ததி அடிப்படை வகுப்புக்கான பயிற்சி பாடங்கள் உண்டு.

அட்சய லக்ன பத்ததி ஜோதிட முறை மட்டும் அல்ல, மென்பொருளும் அள்ள, அள்ள, குறையாத அட்சய பாத்திரமே!

இந்த அரிய ஜோதிட பொக்கிஷத்தை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்திய வாக்கு யோகி திரு.பொதுவுடைமூர்த்தி சார் அவர்களுக்கு என்றென்றும் நன்றியுடன்

**ALP Astrologer**

**R.சாந்திதேவி ராஜேஷ்குமார்**

**7010074415 - 9786556156**

**(அட்சய லக்ன பத்ததி ஜோதிடர்**
**என்பதில்**

**பெருமை கொள்கிறேன்)**

https://youtu.be/ZP3KBpltE7U




அனைவருக்கும் வணக்கம்,

இந்த நாள் இனிய நாள் வாழ்வில் எல்லாரும் எல்லா வளங்களும் பெற வேண்டும்.

களத்திர தோஷம் என்பதை பற்றி பார்ப்போம்.

இந்த அட்சய லக்ன பத்ததி யில் களத்திர தோஷம் எப்படி பார்க்கலாம்?

ஜெனன லக்னத்திற்கு 8ம் இடத்தில்

பாவ கிரகங்கள், பாதிக்கப்பட்ட கிரகங்கள் இருந்தால் அது களத்திர தோஷம் என்பது நம்முடைய பாரம்பரிய ஜோதிட முறை.

இந்த அட்சய லக்ன பத்ததியில் எப்படினா? திருமணம் ஆகக்கூடிய நேரத்தில் என்ன லக்னமோ அந்த லக்னத்திற்கு **8**ம் இடத்தில் பாதிக்கப்பட்ட கிரகங்கள், பாவ கிரகங்கள் சூழ்ந்திருந்தால் அப்பொழுதுதான் களத்திர தோஷம் உண்டாகும்.

உதாரணமாக ஜென்ம லக்னம் மீனம்,லக்னத்திற்கு **8**ம் இடத்தில்

கூட்டு கிரகங்கள் இருந்தால் அங்கு களத்திர தோஷம் உருவாகுமா? உருவாகாது

ரிஷபம் லக்னமாக இருந்து அந்த லக்னத்திற்கு **8**ம் இடம் தனுசு வீட்டில்

கூட்டு கிரகங்கள், பாவ கிரகங்கள்

இருக்கும்பொழுது அங்கு களத்திர தோஷம் வேலை செய்யும்.

எந்த மாதிரியான கிரக அமைப்பு.

கதியோன் **8**ல்**,**காரியும் **8**ல்**,**களத்தராதி **8**ல்**,** காரகனும் **8**ல்அப்பா **,**கருணை குரு பார்வையற்று **,**கரும்பாம்பு நோக்கிடிலோ**,** காசு வைத்து சூதாடும் கல் குடியன்

கணவன் ஆவான்.கல்நெஞ்சு கணவனாலே காலமெல்லாம் கண்ணீர் சிந்தி**,**

கடும் விஷத்தை நாடிடுவாள்**,** விஷம் அதுவும் பொய்த்து விடும்**,**வேதனையும் கூடிவிடும்**,** கல்லுக்குள் தேரை போல**,**

கதி கலங்கி நிற்பாள் பெண்ணே.

ஜென்ம லக்னத்திற்கு **10**ம் இடம் தனுசு வீடு ஆகும்.ரிஷப லக்னம் **20** லிருந்து **30** வரை

இருக்கும்.அந்த நேரத்தில் எட்டாமிடத்தில் கூட்டு கிரகங்கள் சம்பந்தப்படும்போது கதியோன் **8**ல், அதாவது லக்னாதிபதி **8**ல்,காரியும் **8**ல், அதாவது சனீஷ்வரன் **8**ல்,களத்தராதி அதாவது **8**ம் வீட்டின் அதிபதி,களத்திர காரகனும் **8**ல் அதாவது சுக்கிரன் **8**ல் இருந்தால் களத்திர தோஷம் வேலை செய்யும்.

குருவின் பார்வை இல்லாமல் சனி**,**

ராகு -கேதுக்களின் பார்வை படும் பொழுது இந்த தோஷம் வேலை செய்யும்.

ஜாதகம் சிறப்பாக இருந்தும் வாழ்க்கை ஏன் நன்றாக இல்லை என்றால்**?**

களத்திர தோஷம் தான் காரணம்.

அட்சய லக்கன பத்ததி முறையில் லக்னத்திற்கு **8**ம் பாவகம் வலிமை

இல்லாமல் இருக்கும் பொழுது அங்கு வாழ்க்கையில் பிரச்சினைகள் உருவாகும்.

இதற்கு பரிகாரங்கள் என்னவென்றால் தனிப்பட்ட ஜாதகரை பொருத்தது.

அப்பா வழியில் ஏற்பட்ட கர்மாவா**?** இல்லை

அம்மா வழியில் ஏற்பட்ட கர்மாவா**?** இல்லை முன்வினை கர்மாவா**?**என்பதை பொறுத்து அவர்களுடன் சென்று பரிகாரங்கள் செய்தால் நல்ல வாழ்க்கை அமையும்.

மீண்டும் ஒரு இனியதொரு நிகழ்வில் சந்திப்போம்.

நன்றி**,**வணக்கம்.

https://www.youtube.com/watch?v=2UTeHcSvqCw&feature=youtu.be

**100% சதவீதம் வெற்றி அடைய ஜோதிடர் சிறப்பு வாய்மொழி**

**S.POTHUVUDAIMOORTHY**

ALP INVENTOR அன்பே சிவம், அன்பே ஆனந்தம் , அன்பே வாழ்க்கை, எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க. இன்று ஒரு விஷயம் சொல்கிறேன். இந்த விஷயத்தை வாழ்க்கையை நீங்கள் கடைபிடித்தால் கண்டிப்பாக 100% வெற்றி உங்களுக்குதான். அதற்கு என்ன செய்ய வேண்டும்? உங்களுடைய கர்மாவை கழிக்க, உங்களுக்கு தெரிந்த விஷயத்தை யாருக்காவது ஒருவருக்கு சொல்லிக் கொடுத்து விடுங்கள். அந்த குரு உபதேசத்தை கண்டிப்பாக சொல்லிக் கொடுத்து விடுங்கள். உங்களுக்கு தெரிந்த ஒரு விஷயத்தை அறிவுரை மூலமாகவோ,

கலந்துரையாடல் மூலமாகவோ மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுத்து விடுங்கள். அப்படி சொல்லிக் கொடுப்பதால் உங்களுடைய வாழ்க்கை 100% கண்டிப்பாக மாறும். உங்களுடைய கர்மாவை கழிக்க மிகப்பெரிய ஆயுதம் என்னவென்றால் நீங்கள் குருவாக மாறுவது 'இல்லை, குருவாக உங்களை நீங்களே தயார்படுத்திக் கொள்வது. இதுதான் உங்கள் வாழ்க்கையை மாற்றும். உங்களுக்கு தெரிந்த ஒன்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால் உங்கள் வாழ்க்கை மாறும். உங்களை சார்ந்த நண்பர்கள் உடைய வாழ்க்கை மாறும். உங்களுடைய கர்மாவும் கழியும். நல்லதொரு நிகழ்வு அமையட்டும், உங்களுடைய வாழ்க்கை சந்தோஷமாக மாறும். உங்களுக்கு தெரிந்த ஒரு விஷயத்தை மற்றவர்களுக்கு சொல்லிக்

கொடுங்கள். கண்டிப்பாக உங்கள் வாழ்க்கை மாறும். "தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று". எனக்கு தெரிந்த சின்ன விஷயத்தை , எனக்கு ஜோதிடம் நன்றாக தெரியும். ஜோதிடத்தில் முன்ஜென்மம் எனக்கு மிகவும் நன்றாக தெரியும். கேட்கிறாங்க ,கேட்கவில்லை, புரியுது, புரியவில்லை,' நான் சொல்லி கொடுத்து விட்டேன், என்னுடைய வெற்றிக்கு இதுவும் ஒரு ஏணிப்படி. என்னுடைய வெற்றிக்கு இதுவும் ஒரு ஏணி படியாக அமையட்டும். நன்றி, வணக்கம்.




**https://play.google.com/store/apps/details?id=com.guruvashishta.akshayalagnapaddati**



உ
ALP ASTROLOGY
அட்சய லக்ன பத்ததி
அட்சய லக்னம்,
அட்சய ராசி சிறப்பு ஜோதிட வகுப்பு
2 நாட்கள் மட்டும்
05.12.2020 முதல் 06.12.2020
இடம்:
5/107-27 GOPALAPURAM,
OFF SALEM STEEL PLANT ROAD, JAGIR AMMAPALAYAM SALEM-636302.
முன்பதிவு அவசியம்
9786556156 - 9788518230
ALPAIR
FOUNDATION
www.alpastrology.com
smoorthyjothidar@gmail.com

# ALP BOOK AVAILABLE PLACES

- Vijaya publications coimbatore - 0422 2385614
- pulam publications chennai – 9840603499
- Centaram Books - Nagercoil - 8870364620
- Jayam Book Centre - Madurai - 9894658036
- Jayasree Book Centre - Kumbakonam – 9952882002
- Odyssey - Adyar - 044-24402264 / 65
- Odyssey - Thiruvanmiyur - 044-42037799
- Odyssey - Coimbature - 0422-2255199, 2255299
- Mary Martin Book Centre - Coimbature – 7598907381
- Vijaya Pathippagam - Coimbature – 7373787063
- Amutham Bookshop - Mettupalayam – 9486411900
- Paalam Bookshop - Salem – 9894784387
- Vallalar Bookshop - Salem – 9080498756
- Vallalar Bookshop - Erode – 7010047966
- New Booklands - T.Nagar - 044-28156006
- Wecan Books - T.Nagar – 8778696612
- Panuval Bookshop - Thiruvanmiyur – 9789009666
- Discovery Book Palace - K.K.Nagar – 8754506060
- Noolangadi – 9262037307
- Giri Trading Bookshops (BOOK SHOP ALL)

**Available in websites:**

**marinabooks.com | udumalai.com |**
**discoverybookpalace.com**
**panuval.com | Commonfolks.in | wecanshopping.com**